ஸ்ரீ திரிபுரசுந்தரீ ஸமேத ஸ்ரீசந்திரமௌளீசுவராய நம:

ஆர்யதர்மம்.

वैशम्प.यन उवाच—

तत्रो राजा धृतराष्ट्रो मनीषी संपूज्य वाक्यं विदुरेरितं तत् ।
सनत्सुजातं रहिते महात्मा पप्रच्छ बुद्धिं परमां बुभूषन् ॥

பிறகு புத்திசாலியாகிய, திருதராஷ்டிர ராஜன், ஸனத்குமாரரைப் பற்றிய விதுரருடைய வார்த்தையை புகழ்ந்துகொண்டு, பிரும்மாத்ம நிஷ்டையில் விருப்பமுண்டானவனாய், ஏகாந்தத்தில் (பாமரஜனங்கள் இல்லாத ஸமயத்தில்) (ஸனத் என்கிற, ஹிரண்யகர்பரின்,ஸத்புத்திரனான) ஸனத் குமாரரைநோக்கி, சிறந்த ஆத்மதத்வஞானத்தைப் பிரச்னம் செய்தான்—என்று வைசம்பாயனர் ஜனமேஜயருக்குச் சொல்லுகிறார்.

இந்த சுலோகமானது ஸ்ரீ மஹாபாரதம், உத்யோக பர்வத்திலுள்ள ஸனத்ஸுஜாதபர்வாவின் இரண்டாவது அத்தியாயத்தின் ஆரம்பத்தில் உள்ளது, இதில் ஸனத்ஸுஜாதர் திருதராஷ்டிரருக்கு வேத வேதாந்த ரஹஸ்யார்த்தங்களையெல்லாம் உபதேசித்திருப்பதால், இதற்கு, ஸனத் ஸுஜாதபர்வமென்று பெயரேற்பட்டது.

இதன் முன் அத்தியாயங்களில், துர்யோதனாதிகளின் துஷ்ட சேஷ்டையால் அதிக துக்கத்தையடைந்த திருதராஷ்டிரர், விதுரரைநோக்கி, உலகில் ஜீவராசிகளுக்குத் திடீரென்று துக்கம் நேரிடுவதற்கு, என்ன காரணம். அதனை எவ்விதம் நிவிருத்திக்கக்கூடும், அதனுபாயங்களையெல்லாம் உபதேசிக்க வேண்டுமென வேண்டிக்கொள்ள, விதுரரும் "ஸ்வதர்மானுஷ்டானம்" முதலிய அனேக உபாயங்களை துக்கவிருத்தி காரணமாக, எடுத்துபதேசிக்கும் சந்தர்ப்பத்தில், பிரஸக்தானுப்ரஸக்தமாக, சரீராதி ஸம்பந்தத்தால்த்தான் ஜீவர்களுக்கு ஸுக துக்கங்கள் நேரிடுகின்றனவென்றும், இவையெல்லாம் நிலையற்றவையென்றும் ஆத்மாவொன்றுதான் சாச்வதமென்றும், அநித்ய வஸ்துவில் நீர்நிலைத்திருக்கக் கடவீர் என்றும் உபதேசித்திருந்தார்.

அதை கேட்டவுடன் திருதராஷ்டிரர், அத்தகைய ஆத்மஸ்வரூபத்தையுமுபதேசிக்கவேண்டுமென விதுரரிடம் பிரார்த்தித்துக்கொள்ளவே, விதுரரும் வேதாந்தவாக்கிய விசார பூர்வமாக அறிந்துகொள்ளவேண்டிய அவ்வாத்மதத்வத்தை உபதேசிப்பதில் சூத்திரஜாதியில் பிறந்த எனக்கு அர்ஹதையில்லை, ஆனாலும் ஸனத்குமாரரைக்கொண்டு ஆத்மதத்வ ரஹஸ்யங்களை உமக்கு உபதேசிக்கும்படி செய்கிறேன். என்று சொல்லி தனது யோகசக்தி மஹிமையால் ஸனத்குமாரரை அங்கு ஆவிர்பவிக்கும்படி செய்து, அவரை திருதராஷ்டிரருக்கு அவ்வாத்ம தத்வத்தை உபதேசிக்கும்படி பிரார்த்துக்கொண்டு திருதராஷ்டிரரையும் பிரச்னம் செய்யும்படி ஏவினார்.

அப்படியே திருதராஷ்டிரரும், ஸனத் குமாரரிடம் பிரச்னம்செய்ய ஆரம்பிக்கின்றார். என்று இதன் கருத்தாகும்.

V. J. S.

ஆர்ய தர்மம்.

ஆங்கிரஸ-௵ ஆடி-௴ ௨௰௨

ஆர்யதர்மப் பிரசாரம்.

எதுமுதல் நம் தேசமானது இதரநாடுகளுக்கு இடங்கொடுத்ததோ, அதுமுதல் நம் நாட்டிற்கு நேர்ந்த ஆபத்துக்கு அளவு ஸங்கியையில்லை. நமக்குள்ளேயே அனேக அவாந்தர கலகங்களுமதிகரித்துவிட்டன. இதன்றி 2000 பாதிரிமார்கள் 500 கோடி ரூபாயுடன் இங்கு வரப்போகின்றனர் என்றும் கேள்விப்படுகிறோம். 5 வருஷத்துக்குள் இப்போது கிருஸ்தவமதத்தில்சேராத இந்தியர்எல்லோரையும்கிருஸ்தவராக்கிவிடுவதென்பதுஇவர்களின் தீர்மானமாம். அந்தோ? இந்த ஸமயம், இவர்களின் மதாபிமானத்தைக்கண்டு ஸந்தோஷப்படுவதா? அல்லது இவர்களைப்போல் நம்மவரில் ஒருவருக்காவது மதாபிமானம் சிறிதுங் காணவில்லையே என்று வருந்துவதா? இவர்களுக்கு நல்வரவு கூறி அழைப்பாரும் நம்மவரில் பலருண்டு. இந்த ஸந்தர்ப்பத்தில், நாம் நமது மதத்தை பாதுகாத்துக்கொள்வதற்காக என்ன காரியம் செய்யப்போகின்றோமோ? தெரியவில்லை வரப்போகின்ற கிரஸ்தவப்பிரசாரகர்களோ பேசுந்திறமை வாய்ந்தவர்களும் வஞ்சகர்களுமாவர். ஆகவே, நம்மவரில் பெரும்பாலோர் அவர்களிடம் அகப்பட்டுக்கொள்ளாமலிருக்க ஒருபோதும்முடியாது. நம்மவரில் மேதாவிகளாயுள்ளோர் இவர்களுடைய மதத்தில் சேராமல் தப்பித்துக்கொள்வார்களாயினும், நமது ஆர்யச்சிறுவர்கள் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்குப் போவார்களானால், அவர்களுக்குத் தப்பிக்கும் வழியில்லை. அவர்களால் கற்பிக்கப்பட்ட மதவுணர்ச்சியுடன் தான் நமது சிறுவர் பள்ளியிலிருந்து வெளிவந்து விளங்குவார்கள். இதன்றி, இவர்களால் ஏற்படுத்தப்பட்ட தொழிற்சாலைகளிலும் பல ஏழைகள் கூலிவேலைசெய்யப் புகுந்து கடைசியில் அவர்கள் மதத்தில் சேர்ந்து

விடலாம். இவ்வித நிலைமை நமக்கு ஏற்படாமலிருக்க நாம் என்ன ஏற்பாடு செய்வது? முதலாவதாகச் செய்யவேண்டிய வேலையை கவனியாமல், எல்லோரும் "ஸ்வாராஜ்யம்;" வேண்டுமென்று சொல்வது அவ்வளவு உசிதமாயில்லை. எவராயினும் ராஜ்யபரிபாலனம் செய்யட்டும். வேண்டிய சட்டங்களைச் செய்துகொள்ளட்டும், நாம் நமது மதத்தை கைநழுவவிடாமல் பற்றிக்கொள்ள வேண்டும். இது ஒன்று மாத்திரம் நம்மிடமிருந்தால் நம் நாடு மேன்மையடைந்துவிடும், மதத்தின்வாயிலாகக் கிடைக்கும், ஸ்வாராஜ்யந்தான் ஹிந்துக்களுக்கு அமைதி அளிக்கும், நமது புராதன வித்யாப்யாஸ முறை அபிவிருத்திபடைந்திருக்குமாயின் நமது மதத்திற்கு இவ்வளவு துர்தசை ஏற்படுவதற்கு நியாயமில்லை. இப்போது நமது மதத்தின் உண்மையையொருவருமறியவில்லை என்பது பிரஸித்தமே. ஆகவே அறிவாளிகள் தமது வித்யையை, வைதிக மதப்பிரசாரம் செய்வதற்காக உபயோகப்படுத்தவேண்டியது மிகவும் அவசியம். அவர்கள் கிராமம் கிராமமாய்ச்சென்று மதவுண்மையை உபதேசித்துவரவேண்டும்.

இந்த ஸந்தர்ப்பத்தில் நம் நாட்டில் வஸிக்கும் ஆஸ்திகதர்மப் பிரபுக்களும், தம்மாலியன்ற அளவு உதவிபுரிய முன் வரவேண்டியதும் அவசியம். அப்பிரபுக்கள் உதாஸீனமாயிருந்தால் ஒரு காரியமும் நமக்கு நிறைவேரமாட்டாது. இவ்விஷயத்தில், அவர்களுடைய திரவ்யம் உபயோகப்படுமேயானால் பகவத்ப்பிரஸாதம் நிச்சயமாக கிடைக்கும். ஸ்ரீமான்கள், மதப்ரசர்கர்களை குடும்பிகளாய் கஷ்டப்படாமல் ஜீவிக்கும்வண்ணம் செலவுக்குக்கொடுத்து உதவவேண்டும். இல்லாதபக்ஷத்தில், பிரசாரகர்கள் ஸரியானபடி வேலைசெய்யமாட்டார்கள். அப்படிக்குச் செய்தாலும், அவர்களுடைய வார்த்தைக்கு விலையில்லாமற் போய்விடும், ஜனங்களுக்கும் அவர்களிடம் கௌரவபுத்தி உண்டாகமாட்டாது பிக்ஷுகர்களாகவே அவர்களை ஜனங்கள் கருதுவார்கள். வித்வான்களிலோ பெரும்பான்மையாக தரித்திரர்கள்தான் அதிகமென்பது ஸர்வப்பிரஸித்தம், ஆகவே, ஆஸ்திகப் பிரபுக்கள்தான் அவர்களை லோகோபகாரத்தின் பொருட்டு ஸௌக்கியமாய் வாழும்படி செய்யவேண்டும்.

எத்தனையோ, அனுவச்ய காரியங்களில்; நாம் ஏராள திரவ்யத்தை தெரியாத்தனத்தால் செலவழித்துவிட்டுப்பிறகு பச்சாத்

தரப்படுகிறோம், அந்த விஷயங்களில் சொத்து வருமானங்களை நாம் கவனிக்கின்றோமா? ஆகவே அவ்வித விஷயங்களில் செலவு செய்வதை கொஞ்சங் கட்டுப்படுத்திக்கொண்டு அவச்யமான மதப்பிரசார விஷயத்தில் உபயோகப்படும்படி செய்யும் தனிகர் தான் சிரேஷ்டமானவர். இப்பொழுது அப்படிப்பட்ட மனிதர்கள் தான் முன்வந்து வேலைசெய்யவேண்டும்.

மதப்பிரசாரகர்களும் அர்த்த ஆசையை விருத்தியடையச் செய்யாமல் அமைதியுடன், தெளிவாய் யாவருமறியும்படிக்கு மதத்தையுண்மையாக உபதேசித்துவரவேண்டும். கூடியவரையில் அநுஷ்டான சீலர்களாகவும், சாந்தி, தயை, முதலிய நற்குணம் நிரம்பியவர்களாயும். எவ்வளவு துக்கம் நேர்ந்தாலும், பொருமை யைகைவிடாதவர்களாயுமிருக்கவேண்டியது முக்கியம். ஆகவே ஆஸ்திகப் பிரபுக்களும், ஆஸ்திக வித்வான்களும், ஸமமாயிருந்து கொண்டு மதப்ரசாரவேலையைச் செய்துவருவோமானால், கொஞ்ச மாவது மதாபிமானம் நம்மவருக்கு ஜநிக்காமலிருக்காது.

நமது புராதன ஸம்பிரதாயப்படியுள்ள தர்மமார்க்கத்தை ஸம்ரக்ஷிப்பதற்காக, கிராமந்தோறும், அனேக ஸங்கங்களையும், பள்ளிக்கூடங்களையும்,மதப்பிரசாரர்களேஸ்தாபித்துவரவேண்டும். அதற்குவேண்டிய செலவுகளுக்கெல்லாம் அந்தந்த கிராமத்தாரே ஆதரவுடன் அவசியம் ஏறபாடு செய்யவேண்டும்.

நமது ஆர்யாவர்த்த தேசத்தில், கிறிஸ்தவர்கள் எவ்வளவு பள்ளிக்கூடங்களும், அச்சுக்கூடங்களும், பத்திரிகைகளும், தொழிற்சாலைகளும், சர்ச்சுகளும் எவ்வளவுரூபாய் செலவுசெய்து ஏற்படுத்திபிருக்கின்றனர். பாருங்கள், அவர்கள் தமது முன் னேற்றத்திற்குறிய வேலைகளில் ஒன்றுகூட விடாமல், இரவு பகலாய் வேலைசெய்து வருகின்றனர், நாம் நமது முன்னேற்றத் திற்குறிய வேலையில் ஒன்றுவது செய்தோமா? நாம் இதைப்பற்றி கவனிக்கவேண்டாமா? அவகாசமில்லையா? ஆளில்லையா? பொருள் இல்லையா? இவ்விதமே இன்னும் கொஞ்சகாலமிருந்தால் "ஆர்ய தர்மம்" என்றபெயருங்கூட மறைந்துபோகும். நாம்,நமதுபுராதன மதத்தை கைநழுவவிட்டோம், அதில் அபிமானத்தை அறவே ஒழித்துவிட்டோம்.

நமக்கு மதாபிமான மிருக்குமானல் செய்கையில், காட்ட வேண்டுமே யன்றி வெறும் அபிமானம் உதவமாட்டாது.

ஆகவே, வாசா கைங்கர்யம் புறியாமல், கார்யத்தைச்செய்ய ஆரம்பிக்கவேண்டியதுதான் ஆஸ்திகருக்கு அழகாகும்.

சுபம் V. ஜகதீச்வரசாஸ்திரிகள்.

ஓர் விக்ஞாபனம்.

சந்தா நேயர்களே?

நமது ஆர்யதர்மமானது, ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு ஸ்ரீ பாமாசார்யாளின் பரிபூர்ண கருணுகடாக்ஷத்தை முன்னிட்டுக்கொண்டு நம் பாதநாட்டில், ஸஞ்சரித்து ஆஸ்திகர் களின் அகமகிழும்படி செய்துகொண்டு விளங்கிவருகின்றவிஷயம் யாவருமறிந்ததே.

இப் பத்திரிகையின் முக்கிய உத்தேசம், முதல் பக்கத்தில் குறிப்பிடப்பட்ட स्वस्ति प्रजाभ्यः என்ற சுலோகத்தின் கருத்தே யாகும். அதாவது இவ்வுலகிலுள்ளோர் யாவரும், க்ஷேமமாய் வாழவேண்டுமென்பதுதான் இதனுத்தேசம். அது எப்படி ஏற் படுமென்னும் விஷயத்தையுமிந்த சுலோகமே தெரிவிக்கின்றது. அதெப்படியென்றல், "ஸமஸ்தப் பிரஜைகளுக்கும் மங்கள முண்டாகுக" என்று முதலில் கூறப்பட்டுளது. அதற்கும், வைதிக வர்ணுச்ரம தர்மானுஷ்டானந்தான் இன்றியமையாத ஸாதனம் என்பது சாஸ்திரஸித்தம், அதன் பிறகு "அரசர்கள், மனுநீதி தவருமல், நியாயமார்க்கத்தில், இப் பாரதபூமியை பரிபாலிக்க வேண்டும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது. அரசர்கள் நியாய மார்க்கத்தில் பிரஜாபரிபாலனம் செய்துவரும் பட்சத்தில்தான் ஜனங்கள் தீயச்செயல்களில் பிரவேசிக்காமலிருப்பார்கள். நமது வைதிகமதம் நிலைத்திருப்பதற்கு அரசர்களின் தர்ம பரிபாலனக் கிரமமும், அவச்யமானது பற்றி அதனையுமெடுத்துக் கூறப்பட்டு இருக்கிறது.

இதற்கும் காரணம், பசுக்களும், பிராம்மணர்களும், சுகமாய் இருப்பதுதான். அதன்பிறகு, இவ்வளவு ஸாதனங்களால் ஏற்படும் பிரயோஜனத்தை 'எல்லாஉலகமும் ஸுகித்திருக்கவேண்டும்' என்று பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

இவற்றால் யாவரும் க்ஷேமத்தைபடைந்து வாழவேண்டும் என்ற உத்தேசம் இந்த சுலோகத்தை குறிப்பிடப்பட்டதாலேயே ஸ்பஷ்டமாய்த் தெறிவதால், இதை ஆஸ்திகரனைவரும், வாங்கி, நமது புராதன ஸம்பிரதாயப்படியுள்ள ஸதாசாரங்களைத் தெரிந்து கொள்ளவேண்டியது அவச்யமெனவேண்டுகிறோம். இவ்வுலகில் பல பத்திரிகைகளிருந்தபோதிலும் நம்மை வைதிக சாரத்தினின் றும் நழுவவிடாமல் தடுப்பதற்கு இது உபயோகப்படுவதுபோல் வேறெந்தபத்திரிகையும் உபயோகமாகமாட்டாதென்பது நிச்சயம். இதனால் இதை வாங்குகிறவர்கள், தாம் வாங்குவதோடு மட்டும் நிற்காமல் தம் ஸ்னேகிதர்களுக்கு மிவ்விபரத்தை யறிவித்து அவர்களுமிதை ஆதரிக்கும்படி செய்யவேண்டும்.

இப்பத்திரிகை, ஏழைகளுக்கும் உபகாரப்படவேண்டுமென்ற உத்தேசத்தைக் கொண்டேதான், இதன் சந்தாத்தொகை 1 வருஷத்திற்கு ரூ. 3 ஆக குறைத்து ஏற்படுத்தப் பட்டிருக்கின்றது. இத்தரூமூன்றை ஆஸ்திக்யம் உண்மையாயிருந்தால் எந்த ஏழையும் இப்பத்திரிகைக்காக அனுப்புவது கஷ்ட ஸாத்தியமில்லை. இப் பத்திரிகையானது கிராமத்திற்கு ஒன்றுவது அவச்யமிருந்துவரவேண்டுமென்பது நமது பரமாசாரியாளின் அபிப்பிராயமானதால் யாவரும் இதனை ஆதரித்து பரமாசார்யாளின் அனுக்ரஹத்திற்குப் பாத்திரர்களாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

V. ஜகதீச்வர சாஸ்திரிகள்.

———

ரிக் உபாகர்மா.

ஹிந்து பத்திரிகை 25-7-32 இதழில் போலகம் பிரும்மஸ்ரீ சுந்தரசாஸ்திரிகள் அவர்கள் இவ்வருஷம் ரிக்வேத உபாகர்மாவை ஆவணி மீ 28உ தான் நடத்தவேண்டுமென்று எழுதியிருக்கிறார்கள். மேற்கண்டபடி எழுதியிருப்பதற்கு ஆதாரம் ஆடி மீ 25உ முதல் ஆவணி மீ 24உ வரையில் குரு அஸ்தமன காலமானதால் அந்த காலமும் அதன் முன்னும் பின்னும் மூன்று நாள்களும் நிஷித்தகாலமென்றுகாட்டப்பட்டிருக்கிறது. திருக்கணிதபஞ்சாங்கப்படி ஆடி மீ 30உ குரு அஸ்தமனமும் சித்தாந்த பஞ்சாங்கப்படி ஆடி மீ 28உ குரு அஸ்தமனமும் ஏற்படுவதால் ஆடி மீ 23உ ஹஸ்தநக்ஷத்திரத்துடன் கூடிய பஞ்சமியில் ரிக்வேத ப்ரதமோபாகர்மாவை நடத்துவதில் எவ்வித ஆக்ஷேபணையும் ஏற்படுவதற்கிடமில்லை. தவிர நித்யோபாகர்மாவிற்கு (த்விதீயாதி) அஸ்தமனதோஷம் பார்க்கவேண்டியதில்லையென்று நிர்ணயசிந்துஹே மாத்ரி முதலான ஸ்மிருதிவசனங்கள் ஏற்பட்டிருப்பதால் ஆடிமீ 31உ சிராவணசுத்தசதுர்தசி சிரவண நக்ஷத்ரத்தில் த்வீதீயாதி உபாகர்மங்களை நடத்துவதிலும் ஆக்ஷேபணை ஏற்படுவதற்கில்லை. இதுவிஷயத்தை நமது பிராந்தியங்களில் வசிக்கும்ரிக்வேதிகளான திராவிட, ஆந்திர, கர்னாடக, மஹாராஷ்டிர, குஜராத்தி பிராமணசமூகம் கவனித்து ஆடிமீ 23உப்ரதமோபா கர்மத்தையும் ஆடி 31உ த்வீதீயாதி உபாகர்மாவையும் நடத்தவேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறேன்.

ரிக்வேதி.

ஸமபங்க்தி போஜனம் ஸரியா !?

சென்ற 31—7—32உ சென்னையில் ஆர்ய ஸமாஜத்தார் ஒரு ஸமபந்தி போஜன விருந்து நடத்தினர்கள்என்பது பிரியவாசகர்களுக்குத் தெரிந்திருக்கலாம். அந்த விருந்திற்குப் பிராமணர், பிரர்ம்மணரல்லாதார், ஆதித் திராவிடர், மிலேச்சர், மேனாட்டினர்

முதலிய யாவரும் ஜாதிபேதமின்றி வந்திருந்தனராம். அவ்வி ருந்து சாப்பாட்டுக்குவந்த விருந்தினரெல்லோரும் முந்தியே அணு 6-கொடுத்து டிக்கட்டு பெற்றுக்கொண்டனராம். அப்படிப்பட்ட விருந்தில் ஒருவிசேஷமுண்டு. அதாவது தென்னிந்திய மரக்கரி போஜனம் அளிக்கப்பட்டதாம்.

31—7—32ஆகிய அந்த புண்ய தினத்திலேயே நம் தேசத் திலுள்ள ஜாதிபேதங்களைப் போக்குவதின் பொருட்டு மதுரை யிலுங்கூட சுயமரியாதை சங்க ஆதரவில் ஒரு ஸமபந்தி போஜன விருந்து நடந்ததாம். ஆனல் அவ்விருந்து சாப்பாட்டு டிக்கட்டு அணு நான்குதான். இவ் விருந்திலும், இவர்களபிப்பிராயப் பிரகாரமாக ஜாதி, மதகக்ஷி, வித்தியாஸமின்றி எல்லோருங் கலந்துகொண்டனராம்.

இப்படிப்பட்ட விருந்துபோஜனங்களில், மகரிஷி குலத்திலு தித்தபிராம்மணர்களுங் கலந்துகொண்டார்களே! அது நியாயமா என்றுதான் நான் வருத்தப்படுகிறேன். சுயமாகவே புத்திமான்க ளாகிய பிராம்மணர்களே, மேனுட்டு நாகரீகத்தில் மயக்கமுற்று, மேனுட்டு ஆகாரமுறையைப் பின்பற்றுவார்களானல் மற்ற ஹிந் துக்களிடம் குற்றமென்னவிருக்கிறது.

ஹிந்துக்களின் ஆகார முறையில் ஏதாவது குற்றமுண்டா? அப்படிப்பட்ட விருந்தில் கலந்துகொள்வதால் ஏதாவது ஸௌகரி யமுண்டா? இதனல் ஸ்வராஜ்யம் கிடைக்கும் என்பதும் கனவுமாத் திரந்தான் என்பதில் ஐயமில்லை. நாம் நமது தர்ம மார்க்கத்தை பிடிவாதத்துடன் பரிபாலித்து வருவோமானல் ஸ்வாராஜ்யம் ஆயாஸமில்லாமலே ஸித்தித்துவிடும். இப்படிப்பட்ட அக்கிரமங் களைப் புத்திக்குத் தோன்றியவாறு செய்வதால் ஸ்வராஜ்யம் கிடைக்காமல் போவதுமன்றி, அனேக அனர்த்தங்களும் அடை யும்படி நேரிடும். அந்தோ! நமது ஆர்யர்களின் மோஹத்தை என்னென்று வர்ணிப்பது? ஸ்வாராஜ்பத்திற்கு ஆசைப்பட்டுக் கொண்டு அதன் காரணத்தைக் கண்டுங்கேட்டுங்கூட அதனை அலக்ஷ்யம் செய்துவிட்டு ஸ்வாராஜ்ய நாசகாரணங்களைப் பின் பற்றுவது எவ்வளவு அறியாமை? இந்தசமயத்தில் ஸ்ரீமஹா பாரதத்திலுள்ள சில வசனம் ஞாபகத்திற்கு வருகின்றது.

OUR SERVANTS IN WARM CLOTHING AT CARBAYANG

JUNGPON'S SPIES
MILITARY OFFICER & HIS FRIEND

नियतस्त्वं नरव्याघ्र शृणु सर्वमशेषतः ।
यथा राज्यं समुत्पन्नमादौ कृतयुगेऽभवत् ॥
नैव राज्यं नराजासीन्न दण्डो न च दाण्डिकः।
धर्मेणैव प्रजास्सर्वा रक्षन्तिस्म परस्परम् ॥

என்று சாந்திபர்வம் 59-வது அத்தியாயத்தில் ஜனநாயக அரசாக்ஷிக்கு வர்ணாச்ரமதர்ம பரிபாலனம்தான் முக்கிய காரணமென்று சொல்லிவிட்டுப் பிறகு,

पाल्यमानास्तथान्योन्यं प्रजास्सर्वेण भारत ।
दैन्यं परमुपाजग्मुस्ततस्तान्मोह आविशत् ॥
ते मोहवशमापन्ना मनुजा मनुजर्षभ ।
प्रतिपत्ति विमोहाच्च धर्मस्तेषामनीनशत् ॥

என்று ஆரம்பித்து

रक्ताश्च नाभ्यजानन्त कार्याकार्यं युधिष्ठिर ।
अगम्यागमनं चैव वाच्यावाच्यं तथापरे ॥
भक्ष्याभक्ष्यं च राजेन्द्र दोषादोषं च नात्यलम् ॥

என்பதாதிகளால் மோஹவசமாக ஏற்பட்ட "ஸமபந்திபோஜனம்" முதலிய காரியங்களால் ஸ்வாராஜ்ய நாசந்தானேற்படுமென்று ஸ்பஷ்டமாய் அறிவிக்கப்பட்டிருக்கின்றது. இக்காலத்திய நவீன ஸமாஜத்தார்களிடம் சாஸ்திரசர்ச்சை செய்வது மிகவும் உசிதமில்லை. நிற்க.

இவ்வாறே ஹிந்துக்களாகிய நமக்குள் ராகத்வேஷாதிகள் அபிவிருத்தியடைந்திருப்பதற்கு ஜாதி மதாசார பேதமொருக்காலும் காரணமாகாது. அப்படியே கலிகாலமென்பதும் ஸரியன்று. பகவத் ஸங்கல்ப்பம் என்பது அழகல்ல. பின்னை நம்மிடமுள்ள தோஷந்தான் காரணமென்பதுதானுசிதம். ஆகவே சங்கத்தார் எல்லோரும் தம்மிடமுள்ள குற்றங்களையல்லவா முதலில் விலக்குவதற்குப் பாடுபடவேண்டும். அவரவர்கள் தம் குற்றங்களை விலக்கிக்கொண்டால் ராகத்துவேஷம் நம்மிடம் எப்படியணுகும் ஜாதிபேதம் முதலியவற்றை ஒழித்துவிட்டாலும் நம்மிடமிருந்து ராகத்வேஷம் அகன்றுவிடுமா ? ஒற்றுமையும் உண்மையாக ஏற்பட்டுவிடுமா? ஆத்ம குணங்களை ஸம்பாதித்தாலன்றி ஒருபோதும் ராகத்வேஷங்கள் விலகமாட்டாது. அதன்மூலமேற்படவேண்

டிய ஒற்றுமையும் அடையமுடியாது. ஆதலால் ஜாதிமத பேதங் களையொழித்துவிடவேண்டும் என்பது எப்படி இவர்களுக்கு அழகாகும். இதனால் மதத்தின்மூலமாகத்தான் நாம் ஒற்றுமை அடைவது ஸாத்தியமாகும் என்று நிச்சயமாய் ஏற்படுகின்றது.

ஆகவே ஸமபந்திபோஜன விருந்தால் எவ்விதம் ஸ்வாராஜ் யமோ, அல்லது ஒற்றுமையோ, மற்றுமுள்ள மனோரதமோ, ஸித்திக்கக்கூடுமென்பது புறியவில்லை.

இதனால் நமக்குள் பாஸ்பாஸ்னேகம் அதிகரிக்குமென்பதும் ஸரியில்லை. ஸ்னேகம் கொஞ்சங்கூட மனதில் வைத்துக்கொள்ளா மலே, சத்துருத்வத்தோடு கூடவே ஸமபந்தியில் போஜனம் செய்யக்கூடாதோ? இத்தகைய அகாரியத்தைச் செய்தாவது நமக்கு ஸ்னேகம் எதற்காகவேண்டும், ஸன்மார்க்கத்தால் அதனை அடையக்கூடாதோ? அவ்விதம் ஸ்னேகம் ஏற்பட்டாலும் நிஷ் பிரயோஜனமேயாகும்.

ஸமபந்திபோஜந விருந்துண்ணுதவர்களுக்குங்கூட தற்காலத் தில் ஸ்னேக ஸம்பந்தம்மட்டிலும் காணவில்லையா? ஆகையால் சாப்பாட்டினால்தான் ஸ்னேகமுண்டாகவேண்டும் என்பது மூடத்தனம்.

தவிற இவ் விருந்தானது தர்மசாஸ்திரப்பிரகாரமாயும் நமது ஆயுர்வேதப் பிரகாரமாயும், நிந்திக்கத்தக்கதே. தர்மசாஸ்திரங்களில் இப்படிப்பட்ட ஆகாராதிகளால்தான் ஆரோக்யக் குறைவு, ஆயுள் குறைவு முதலிய அனர்த்தங்களேற்படுவதாக விரிவாய்ச் சொல் லப்பட்டிருக்கின்றது. இவ் வனர்த்தங்களையெல்லாம் உத்தேசித் துத்தான் ஆகாரத்தின் குணம் அதைப் பரிசுத்தம் செய்யும் மந்தி ரங்கள், மனோபாவனை முதலிய நியமானுஷ்டானத்துடன் ஆகா ரத்தை உட்கொள்ளும்படி நமது சாஸ்திரங்கள் போதிக்கின்றன.

பசியை விலக்கிக்கொள்வதற்காகமட்டிலும் ஆகாரம் செய்ய வேண்டுமென்று நமது சாஸ்திரங்களபிப்பிராயப்படவில்லை. நம் முடைய ஆகாரம் அமுதவடிமாகி, மனதை சுத்திசெய்து சரீரத் திற்கு ஆரோக்ய ஸுகமளிப்பதற்காகப் பல நியமங்களும், போஜன காலத்தில் உபயோகித்துவரும்படியல்லவா நமது சாஸ்திரம் கூறு கின்றது. இப்படிப்பட்ட ஆகாரம்தான் அமிருதமென்பது அதுதான் ஔஷதமுமாகும்.

நமது ஆகாரமுறைகளெல்லாம் மிகப் பரிசுத்தமானவை. சரீரத்துக்கு ஆரோக்யமாயும், மனதிற்கு ஸமாதான ஜனகமாயும் அறிவிற்குக் கூர்மையை அளிக்கக்கூடியதுமாகிய ஆகாரத்தைப் பகவானுக்கு அர்ப்பணஞ்செய்து நமக்கு நெருங்கின விருந்தினர்களுடன்மட்டிலும் ஸ்வீகரித்துக்கொண்டு மகிழ்ச்சி பெறுவது தான் மேலானது. ஆகார வித்தியாஸத்தால் அவரவர் எண்ணங்களும் வித்தியாஸப்பட்டுவிடுவது வழக்கம். நம்முடைய ஆகாரங்கள் நம் எண்ணங்களாலேயே அமிருதமாகவும், விஷமாகவும், மாறிவிடலாம். தாயார் கோபத்துடன் குழந்தைகளுக்குப் பால் கொடுத்தால் அது அக்குழந்தைகளுக்கு மரணபரியந்தம் கொடுத்துவிடும் என்று பல ஆதாரங்களுமுண்டு. ஒருவர் போஜனம் செய்யுங்காலத்தில் மற்றொருவர் அப் போஜனத்தைக் கெட்ட எண்ணத்துடன் பார்த்தால் அதன்மூலமாக அவ்வாகாரத்தில் விஷசக்தி யுதிக்கின்றது.

இதைத்தான் நாம் திருஷ்டி தோஷம் என்பது வழக்கம். இதனால்தான் சாப்பிடும்போது கெட்ட சிந்தனைகளும் கெட்டவர்களின் ஸம்ஸர்கமும் கூடவேகூடாது என்று நம் முன்னோர்கள் நமக்கு உபதேசித்திருக்கிறார்கள்.

நமது புராதன ஆயுர்வேதத்திலுங்கூட இப்படிப்பட்ட போஜனத்தால் குஷ்டம் முதலிய தீரா நோய்களுத்பத்தியடைகின்றனவென்று சொல்லப்பட்டிருக்கின்றது. பிளேக், தொத்துவியாதிகள் இவ் வுலகில் அதிகரிப்பதற்கு நீசர்களின் காற்றுவாடையே போதுமென்றும் வர்ணிக்கப்பட்டிருக்கின்றது.

न पतितैस्सहासीत என்று சரகத்திலும்

प्रसङ्गाद्गात्रसंस्पर्शान्निश्वासात्सहभोजनात् ।
सहशय्यासनाच्चापि गन्धमाल्यानुलेपनात् ॥
कुष्ठं ज्वरश्च शोषश्च नेत्राभिष्यन्द एव च ।
औपसर्गिकरोगाश्च संक्रामन्ति नरान्नरम् ॥

என்று ஸுச்ருதத்திலும் இப்படிப்பட்ட விருந்து போஜனத்தால் அனேக தொத்துவியாதிகள்தான் ஜனங்களுக்கு ஸம்பவிக்குமேயன்றி ஆரோக்யம் அணுவளவும் உண்டாகாது என்று ஸ்பஷ்டம்,

நமது ஆயுர்வேதத்திற்கும், தர்ம சாஸ்திரத்திற்கும் விரோதம் ஒரு விஷயத்திலும் கிடையாது.

அதனுல்தான்

आसनाच्छयनाद्यानात्संभाषात्सहभोजनात् ।
संक्रामन्ति हि पापानि तैलबिन्दुरिवांभसि ॥

என்று பல ஸ்மிருதி வசனங்களு மிக்காரியத்தைத் தீயச்செய லென்று வர்ணிக்கின்றன.

இவ்விதமிருக்க, என்? நமது ஜன்மாவை இவ்வகாரியங்களால் வீணுக்கிக்கொள்ளவேண்டும்.

இதன்றி மாம்சத்தையுமா அவ்விடத்து உட்கொள்ளவேண்டும். ஜீவகாருண்யம்அவச்யம் வேண்டுமென்னுமிச்சங்கத்தாரெண்ணிறந்த ஜீவர்களை வதைசெய்து வயிற்றை நிரப்பி சரீரத்தைப் போஷிப்பது உசிதமானுல் தமது கடமையென்று யாகம் முதலிய புண்யகாரியங்களில் சில வைதிகர்களால் செய்யப்படும் ஜீவவதையைமட்டிலும் நிந்திப்பானேன். அவர்கள் என்ன பாபம் செய்தார்கள். இவர்களுடைய ஜீவகாருண்யம் பிரஸங்கத்துடன் நிற்கிறதேயன்றி காரியத்தில் மிருகவேட்டைதான் தினந்தோறும் நடைபெற்றுவருகின்றது. அந்தோ! கால வித்தியாஸத்தால் மனிதர்களுக்கு மிருக குணங்களும், மிருகங்களுக்கு மனித குணமும் விருத்தியடைகின்றதே? ரிஷிகள் மாம்ஸ ஆகாரம் எடுத்துக்கொள்ளவில்லையா? என்பது கேள்வியாகாது. நீங்கள் ரிஷிகளா?

ஆதலால் ஆஸ்திகர்களே? ஆகார விஷயத்தில் நாமாவது ஜாக்கிரதையாக இருப்போம். விருந்திற்குப் போகிறவர்கள் போகட்டும். அவர்களுடன் நாம் சேருவதுமனுசிதம். சேர்ந்தால் சேர்க்கைப் பாபம் நம்மை விடாது. என்ன கதறினுலும் யார் கேட்கப்போகிறுர்கள். இப்படிக் கதறுவதும் நமதுகடைமையென நினைத்துத்தான் கொஞ்சமென்னுடைய அனுதாபத்தை வெளியிட்டேன். இக்காலத்தில் ஆஸ்திகர்களைத் தட்டி எழுப்புவது மிகவும் அவச்யம் என எனது தோற்றம்.

V. ஜகதீசுவர சாஸ்திரிகள்.

சிறுவருக்கான சிறுகதைக் கொத்து.

மந்த பாலர்.

1. மந்தபாலர் என்று ஓர் மஹர்ஷி இருந்தார். அவர் கல்விக்கேற்ற அநுஷ்டானமுள்ளவர். விதி முடிந்ததும் அவர் பித்ருலோகம் சென்றார். அங்கு ஸ்வர்க்க வாசற்படிகள் மூடிக் கிடந்தன. இதற்குக் காரணமென்ன? என்று தேவர்களைக் கேட்டார். பித்ருக்கள் கடனை அகற்றுபவன் ஸத் புத்ரன். அவனை நீர் பெறவில்லை.

2. அத்யயநம் செய்தீர், ரிஷி கடனகன்றது. அதனால் இங்கு வந்தீர். புத்ரனில்லாததால் உமக்கு ஸ்வர்க்கமில்லை என்றனர். உடனே ரிஷி புத்ரனைப் பெற யோசித்தார். பூலோகம் வந்தார். ஜரிதை என்ற சார்ங்க பக்ஷியைப் பார்த்தார். அதை மணந்து நாலு புதல்வர்களைப்பெற்றார். இவை காண்டவ வனத்தில் வஸித்திருந்தன.

3. மந்தபாலர் லபிதை என்ற மற்றோர் பக்ஷியோடு கூடினார். வெளியிற் சென்றார். எதிரில் அக்னி வருவதைப் பார்த்தார். அது காண்டவ வனத்தைத் தஹிக்கப்போவதை அறிந்தார். அக்னியைத் துதித்தார். அது ஸந்தோஷமடைந்தது. என்ன வரம் வேண்டும்? என்றது. என் புத்ரர்களை எறிக்காமல் விடு என்றார். அப்படியே ஆகட்டும் என்றது.

4. காண்டவ வனம் தீ பற்றி எரிந்தது. ஜரிதை, ஐயோ! என் கணவன் எங்களைவிட்டுச் சென்றாரே! என்செய்வேன்! குழந்தைகள் அநியாயமாகச் சாகின்றனரே! என்று கதரிற்று. குழந்தைகள், அம்மா! நீ பறந்துசெல். நீ இறந்தால் நம் குலத்திற்கு ஸந்ததி இராது. நாங்கள் இறந்து நீ இருந்தால் வேறு குழந்தைகள் பிறக்கும் என்றனர்.

5. தாய், அருமையான உங்களைக் கொன்று நான் ஜீவிக்க வேண்டுமா? அருகிலுள்ள எலி வளையில் புகுந்துகொள்ளுங்கள்! என்றது. புத்ரர்கள், அம்மா! எலி வாயில் அகப்பட்டு இறப்பதைவிட அக்கியில் சாவதே மேல்! நீ புருஷனிடம் செல்! என்றன. மனமில்லாவிடினும் வேறு வகையில்லாமல் தாய் பக்ஷி பறந்து சென்றது.

6. ஜரிதாரி, ஜாரிஸ், ருக்வன், ஸ்தம்பமித்ரன், துரோணன் என்று அவர்களுக்குப் பெயர். அக்நி அருகில் வருவதை இவர்

கள் கண்டனர். உடனே நால்வரும் அவ்வரைத் துதித்தனர். அதைக்கேட்டு அக்நி ஸந்தோஷமடைந்தது. உங்கள் பிதா முன்னமே என்னை வேண்டிக்கொண்டார். உங்களைக் கொல்வ தில்லை என்று ப்ரதிக்ஞைசெய்தேன்.

7. ஆகையால் அஞ்சாதீர்கள்! என்றது. இதற்குள் மந்த பாலர் காண்டவ வநம் எரிவதைக் கேட்டார். தன் குழந்தைகள் கதி என்ன ஆச்சோ? என்று வருந்தினர். இதைக்கேட்ட லபிதை, அக்நி வாக்களித்திருக்கிறார். நீர் புத்ரருக்காக வருந்தவில்லை. முதல் மனைவியை நினைத்து வருந்துகிறீர் என்றது.

8. மந்தபாலர், நான் காம வெறிகொண்டவனல்ல. புத்ர னுக்காக இந்த வேடம் பூண்டவன் என்றார். இதற்குள் காண்டவ வநாக்நி அவிந்தது. ஜரிதையும் அன்புடன் மக்களைக் கண்டு தழுவினள். மந்தபாலரும் அங்குவந்து சேர்ந்தார். குழந்தைகள் அவரைப் பணிந்தன. அவர் அவைகளைக் கட்டி முத்தமிட்டார்.

9. ஆனல் ஒருவரும் அவருடன் பேசவில்லை, என்? ஆபத்காலத்தில் தங்களை விட்டுச் சென்றார் என்ற கோபம்! ஜரிதையோ வேறொரு ஸ்த்ரீயிடம் ஆசைகொண்டான் என்று வருந்தினள். மந்தபாலர், அதைக்கண்டு நகைத்தார். அருந்த தியே வஸிஷ்டரிடம் ஸந்தேஹங்கொண்டாள். வஸிஷ்டரையே அவள் வரவேற்கவில்லை.

10. ஸ்திரீகள் ஸ்வபாவமிது என்றார். தான் முன்னமே வரம் வாங்கியதைச் சொன்னர். பிறகு எல்லோரும் ஸந்தோஷ மாக இருந்தனர். விவாஹம் கேவலம் போகத்திற்கல்ல. யாகாதி களைச் செய்யவும் ஸத்புத்திரனைப் பெறவுமே விவாஹம் என்று உணர்ந்து மந்தபாலரைப்போல் நடக்கவேண்டும்.

——— வே. ஸோமதேவ சர்மா.

வாரவிருத்தாந்தம்.

கௌரவப்பட்டம். 26உ சீமையிலிருந்து ஸ்ரீமான் நாகராஜ சர்மாவுக்கு டாக்டர் என்ற பட்டம்வந்தது. இவர் கும்பகோணம் பாரதம் ராமசந்திராசார் அவர்களின் புதல்வர், கும்பகோணம் அரசாங்க கலாசாலையில் வேதாந்த போதகாசாரியாரகயிருக்கிறார்.

வைதிகத்தின் பெருமையை உணர்ந்து கூடியவரை அதைக் கைகொண்ட லௌகிகரில் இவரும் ஒருவர். அடிக்கடி வைதிக தர்ம விஷயமாகப் பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்வதுடன் நமது மதவிஷயமாக ஆங்கிலத்தில் சில நூல்களையுமியற்றியிருக்கிறார். ஆதலின் ஷஷ்டி பட்டம் தக்க பாத்ரத்திற் களிக்களிக்கப்பட்டதால் பட்டமளித்தவர் தங்களையும் கௌரவப்படுத்திக்கொண்டனர்.

மதக்கல்விவேண்டும். 25உ திருச்சியில் அவ்வூர் தேசீய கலாசாலை ப்ரின்ஸிபால் 'ஸர்வகலாசாலை'' என்பது பற்றி ஓர் உபன்யாஸம் செய்தார். தற்காலகல்வியினால் வருங்கேடுகளைக் கூறி குறைந்தபக்ஷம் இரண்டாண்டாவது கல்விகற்றால் தான் கிருஸ்தவர்களுக்கு மாதாகோவிலில் பக்தி உண்டாவதுபோல் நமக்கு நம் மதத்தில் பக்தி உண்டாகுமென்றார். இதைத் தனிப்பட்டவரல்லது ஸ்தலஸ்தாபநங்கள் நடத்தும் கலாசாலைகளில் அநுஷ்டிப்பது அஸாத்யமானகார்யமல்ல. அதிகாரிகளுக்கு இதன் அவச்யத்தை எடுத்துக் காட்டவேண்டியது ஆஸ்திக பெற்றோரின் கடமையாகும்.

மற்றவர்களின் ஊக்கம். 25உ மதுரையில் அத்வைத ப்ரகடன ஸபையின் இரண்மாண்டு விழா நடந்தது, இதை நடத்தியவர் ஸௌராஷ்ட்ரர்கள். அவர்கள் வேத ஸம்ஸ்கிருதக்கல்விகற்பதும் விச்வகர்மரென்போர் யாகம் செய்வதும் மற்றும் சிலர் வேதாந்த ஸபை கூடுவதும் ப்ரத்யக்ஷமாகக் காண்கிறோம். இது எவ்வளவுவரை தர்மம் என்பதை விசாரிக்க இது காலமல்ல. கர்ம முக்திக்குரிய உயர்ந்த அதிகாரியான பிராமணர்களில் சிலர் கண்டதே காக்ஷி என்று வாழும் வாழ்வைத் திருத்திக்கொள்வார்? என்பதே நமதுகோரிக்கை.

ஸத்விஷயம். 25உ தஞ்சை மேலவீதியில் பிரும்மஸ்ரீ தியாகராஜ சாஸ்திரிகள் ஸ்ரீமத் ராமாயண காலக்ஷேபம் செய்கிறார். சென்னை திருவல்லிக்கேணியில் பிரும்மஸ்ரீ லக்ஷ்மீ நாராயண சாஸ்திரிகள் பாகவத ஏகாதசஸ்கந்தம் கூறுகிறார். லால்குடியில் ஸ்ரீபஞ்சாபகேச சாஸ்திரிகள் ராமாயண காலக்ஷேபம் செய்கிறார்.

செய்வினைநன்றாகச்செய்க! 25உ கல்லிடக்குறிச்சி கீர்வாண வாக் பரிபாலனஸபையினராவில் சாரதா சட்டத்தைக் கண்டித்து ஸ்ரீ அச்வத்தாமாசாரியார் வைத்ய முறையையும், தர்ம

சாஸ்திரத்தையும் தழுவி அழகாக ஓர் உபன்யாஸம் செய்தார். வழக்கப்படி வந்தனோபசாரத்துடன் ஸபை கலைந்தது. இதை ஓர் தீர்மானமாக எழுதி வைச்ராயுக்கறிவித்திருந்தால் ஏதேனும் கிஞ்சித் பயனுண்டாகும். செய்தவரைக் கொண்டாடவேண்டும்.

இரு தீரர்கள்! 26௳ மலையாளம் நம் பூத்ரிகளுடைய விவாஹ விஷயமாக சட்டம் செய்ய ஓர் ஸபை மஹாஜனங்களின் அபிப்ரா யத்தை விசாரித்துவருகிறது. இச் சபையில் ஓர் நம் பூத்ரி ஸ்திரீயும் அங்கத்தினர். அவள் கேட்கும் கேள்விகளுக்குத்தான் பதில் கூறுவது தனதாசாரத்திற்கு விரோதமானதென்று கூறி ஓர் வைதிகர் அதைப் பஹிஷ்கரித்தார். மற்றொருவர் நம் வாதத்தை எப்படியாவது தெரிவிக்கவேண்டுமென்று அவள் முகத்தில்விழிக் காமல் முக்காடு போட்டுக்கொண்டு பேசினார். கலி ராஜனது ஸஹாயத்தால் ஷை சட்டம் பாஸாவது நிச்சயம். ஆயினும் இவ்விருவரது மதாபிமானத்தை மதிப்பரோ?

மதப்ரசாரம். 2௳ நாகையில் ஸ்ரீமான் ஜில்லா ஜட்ஜ் பஞ்சாபகேசய்யர் ஸத் கல்வி என்றும், மன்னார்குடியில் விவாஹம் என்பது பற்றியும் உபன்யாஸம் செய்தார். சென்றவிடங்களிலெல்லாம் இத்தகையோர் செய்யும் உபன்யாஸத்திற்கே மதிப்பு அதிகமாக இருக்கிறது. எப்படியாயினும் இவரது கைங்கரியம் மிக ச்லாகிக்கத்தக்கதே. ஆங்கிலங் கற்றும் அதிகாரத்திலிருந்தும் ஸநாதந தர்மத்தை நம்பி அதைப் பிறருக்கும் உபதேசிப்பவரைக் கொண்டாடாமலிருக்கமுடியாது.

வழி காட்டுகின்றனர். 25௳ பரமக்குடியில் ஸௌராஷ்டர்கள் பெரிய ஸபை கூட்டி பல ரஸமான தீர்மானங்களைச் செய்தனர். சாரதா சட்டத்தைக் கண்டித்தும் மதத்தில் சட்டம் தலையிடக் கூடாதென்றும் குறிப்பிடத்தக்க பலதீர்மானங்கள் நிறைவேறின. மற்றவர் தங்களது நிலையை சீர்திருத்திக்கொள்ளவும் அவச்யமாந தீர்மாநங்களை அரசாங்கத்திற்கு அனுப்பவும் இது தூண்டுகோலாய் இருக்கிறது.

கூர்ம புராணம். 1௳ அஷ்டாதச புராண ப்ரவசன ஸபையினுடைய ஆதரவில் சென்னை ஸ்ரீசங்கரமடத்தில் ஏழு புராணங்கள் பூர்த்தியாகி எட்டாவதாக கூர்ம புராணமாரம்பிக்கப்பட்டது.

வே. ஸோமதேவ சர்மா.